**செ. கு. எண்: 087** **நாள்: 16.08.2019**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 16.8.2019

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், நெடுசாலை கிராமம், ஆவல்நத்தம் கூட்டு ரோடு சாலையில் அமைந்துள்ள டாஸ்மாக் கடையில் விற்பனையாளராகப் பணிபுரிந்து வந்த திரு.மருதை என்பவரின் மகன் திரு. எம். ராஜா அவர்கள் மீது, **14.8.2019** அன்று, கடையினுள் நுழைந்த அடையாளம் தெரியாத நபர்கள் நடத்திய தாக்குதலில், அவர் பலத்த காயமடைந்து உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் அகால மரணமடைந்த டாஸ்மாக் ஊழியர் திரு. எம். ராஜா அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. ராஜா குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து **10 லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.**

மேலும், மறைந்த திரு. ராஜா அவர்களின் குடும்பத்திற்கு தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திலிருந்து குடும்ப நல நிதி, தொழிலாளர் ஈட்டுறுதி காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றின் பணப்பயன்கள் மற்றும் சட்ட ரீதியான இதர பணப்பலன்களையும் உடனடியாக வழங்க நான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

அன்னாரது குடும்ப நிலையை கருத்தில் கொண்டு அவரது மனைவிக்கு, அவரது கல்வித் தகுதிக்கேற்ப சத்துணவு அல்லது அங்கன்வாடி மையத்தில் பணி வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்தக் கொடூரத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கும்படி காவல் துறையினருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**